33—

பாதாள சாக்கடைத் திட்டம்

***6972—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மேலூர் தொகுதி, மேலூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக கசடு–கழிவு மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். அம்மா அவர்களின் நல்லாசியோடு தமிழகத்தில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, மேலூர் நகராட்சியில் சுமார் 50,000 மக்கள் வசித்து வருகின்றனர். அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் எண்ணத்திற்கேற்ப,

2021 பிப்ரவரி 26]

உள்ளாட்சியில் நல்லாட்சி செய்துவரும் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் ஆவன செய்வாரா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன பதிலை உறுப்பினர் அவர்கள் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். அதிகமான இடங்களிலே, அதாவது, சின்ன, சின்ன நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்தமுடியாத காரணத்தினால்தான், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, மாற்றுத் திட்டமாக கசடு–கழிவு மேலாண்மைத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். நிறைய இடங்களில் septic tank கட்டுவதற்கும், சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கும் இடம் கிடைக்காத சூழ்நிலையில்தான் இப்பொழுது 2,3 பேரூராட்சிகளை சேர்த்து செய்ய வேண்டிய சூழ்நிலை வந்தது.

மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, மேலூர் நகராட்சியில் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை 40,017 ஆகும். மேலூர் நகராட்சியில் தற்போதுள்ள மக்கள் தொகை மற்றும் வெளியேறும் கழிவுநீரின் அடிப்படையில், உரிய ஆய்வுக்குப் பின்னர், தற்போது கசடு–கழிவு மேலாண்மைத் திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மா அவர்களின் அரசு முடிவெடுத்துள்ளது. இந்நகராட்சியின் கழிவுநீர் சேகரிப்புத் தொட்டியில் நாளொன்றுக்கு 20 கிலோ லிட்டர் அளவில் கழிவுநீர் சேகரமாகிறது. எனவே, இந்நகராட்சியிலுள்ள கசடு–கழிவுநீரினை லாரிகள்மூலம் எடுத்துச் சென்று சுத்திகரிக்க, 2018–2019 ஆம் ஆண்டு IUDM–ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2.17 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது நகராட்சி எல்லைக்குட்பட்ட மணம்பட்டி குப்பை கிடங்கில் கசடு–கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி இறுதி கட்டத்தை அடைந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், மேலூர் நகராட்சிக்கு அருகில் உள்ள டி. வெள்ளாளம்பட்டி பேரூராட்சியையும் சேர்த்து சுமார்

60,000 மக்கள் பயன்பெற உள்ளனர். வரும் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதி மக்களின் மீதுள்ள அக்கறையினால் இந்தக் கேள்வியை 2017–ல் கேட்டிருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் உத்தரவிற்கிணங்க, உடனடியாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் நகராட்சிக்கு கசடு–கழிவு மேலாண்மைத் திட்டத்தை அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலூரில் நகராட்சி பேருந்து நிலையத்தையும், கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றிய பேருந்து நிலையத்தையும் விரிவாக்கம் செய்து புதுப்பித்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு நகராட்சி பேருந்து நிலையங்களைப் பற்றி குறிப்பிட்டார்கள். பேருந்து நிலையத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதற்கு முன்பே கிட்டத்தட்ட 20 பேருந்து நிலையப் பணிகள் எடுக்கப்பட்டு, அதில் இன்றைக்கு சிலவற்றில் வேலைகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. சில பேருந்து நிலையப் பணிகள் ஒப்பந்த நிலையில் இருக்கின்றன. எனவே, அந்தப் பேருந்து நிலையமும் துறை அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு எடுத்துக்கொள்ளப்படும்.

2021 பிப்ரவரி 26]

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்தான், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுடைய உறுதுணையுடனும், தமிழ்நாட்டு மக்களுடைய அமோக ஆதரவுடனும் மீண்டும் 2021–ல் முதலமைச்சராகப் பதவியேற்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது நிச்சயமாக உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சம்பத்து அவர்கள்.*

திரு. கோ. சம்பத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். தமிழகத்தின் ஏழை மக்களின் வாழ்வில் இன்றும் ஒளி விளக்காய் திகழ்ந்து வரும் ஒப்பற்றத் தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி துயில் கொள்ளும் திசைநோக்கி வணங்குகிறேன்.*

விவசாயிகள் போற்றும் விவசாய முதலமைச்சர், தமிழக மாணவர்கள் போற்றும் தலைசிறந்த முதலமைச்சர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். இராமாயணத்தில் இராமபிரானுக்கு உறுதுணையாக இருந்த இலக்குமணனைப் போல், அம்மா அவர்களின் அரசுக்கு உறுதுணையாக இருக்கிற நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

எனது சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, சோளிங்கர் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் பல ஆண்டுக் காலமாக மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. வணக்கத்திற்குரிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது இதுகுறித்து தெரிவித்தேன். அதற்குண்டான ஆணையை விரைவில் வழங்குவதாகத் தெரிவித்தார்கள். இரண்டு ஒன்றிய அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கேட்டேன், அதில் ஒன்றான சோளிங்கர் ஒன்றிய அலுவலகக் கட்டடத்தைக் கட்டித் தருவதாகச் சொன்னார்கள். அதைக் கட்டித் தருவதற்கான ஆணையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வழங்க இருக்கின்றார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி, மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லையென்றாலும்கூட, தொகுதியின்மேல் உள்ள அக்கறையின் காரணமாகக் கேட்டிருக்கின்றார்கள். சோளிங்கர் ஊராட்சி ஒன்றிய கட்டடம், அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, கட்டித் தரப்படும். இது சம்பந்தமாக, இதற்குமுன்பு என்னை அணுகியிருப்பதாக சொல்லியிருக்கின்றார்கள். நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டிருக்கும். அதிகமான ஊராட்சி ஒன்றிய கட்டடங்களை எடுத்துக்கொண்டால் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சார்பாக கட்டப்பட்டதுதான். விடுபட்ட ஊராட்சி ஒன்றிய கட்டடங்கள் தற்போது குறைவாகத்தான் உள்ளன. அவை அத்தனையும் நிச்சயமாக கட்டி முடிக்கப்படும். தற்போது என்ன சூழ்நிலையில் இருந்தாலும் நிச்சயமாக சோளிங்கர் ஊராட்சி ஒன்றியக் கட்டடம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.*

திரு. விருகை V.N. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்று வாழ்ந்து, மக்களின் இதயங்களில் நீங்காத இடம் பெற்றிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிக் காட்டிய எளிய முதல்வர், சேலத்து சிங்கம், எடப்பாடி தந்த தங்கம், குடிமராமத்து நாயகன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், ஜல்லிக்கட்டு நாயகன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

விருகம்பாக்கம் தொகுதி, 134–வது வார்டு, சூளைப்பள்ளம் என்ற பகுதி அரசுக்குச் சொந்தமான இடம். அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 30 தெருக்கள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர்

2021 பிப்ரவரி 26]

அவர்கள், எனது விருகம்பாக்கம் தொகுதிக்கு கேட்டதையும், கேட்காததையும் வாரி, வாரி வழங்கியிருக்கின்றார்கள். அவருக்கு முதலில் விருகம்பாக்கம் தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே தருணத்தில், அங்கு பாதாள சாக்கடைத் திட்டம் இல்லை; குடிநீர் வசதி, தெரு விளக்கு போன்ற அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. ஆனால், பாதாள சாக்கடைத் திட்டம் மட்டும் இல்லை. கடந்த கூட்டத் தொடரின்போதுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து, உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். தேர்தல் நெருங்கி வருகின்ற காரணத்தால், தயவுகூர்ந்து, பாதாள சாக்கடைத் திட்டப் பணியை தேர்தலுக்கு முன்பாகத் தொடங்கி வைத்தால் சிறப்பாக இருக்கும் என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவந்து, அதனை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், விருகம்பாக்கம் தொகுதிக்குட்பட்ட 134–வது வார்டு, சூளைப்பள்ளம் பகுதியில் உள்ள 30 தெருக்களை பாதாள சாக்கடைத் திட்டத்தில் இணைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இதற்கு முன்னால் எனது கவனத்திற்கும் கொண்டுவந்திருக்கின்றார்கள். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தளவிற்கு, அனைத்துப் பகுதிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. சில பகுதிகள் கழிவு நீரைக் கொண்டுபோய் சுத்திகரிப்பு நிலையத்தில் சேர்க்க முடியாத பகுதிகளாக இருக்கின்றன. இருந்தாலும்கூட விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர், அண்ணன் விருகை ரவியைப் பொறுத்தவரையில், தொகுதி மக்களுடன் இணைந்து சிறப்பான முறையில் பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு வீதியும் அவருக்குத் தெரியும், எனக்கும் தெரியும். பலமுறை*

அவருடன் அவருடைய தொகுதிக்குச் சென்றிருக்கின்றேன். ஆகவே, இந்தத் தெருவைப் பொறுத்தவரையில் நம்முடைய துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக அது எடுத்துக்கொள்ளப்படும். அது தாழ்வான பகுதியாக இருக்கின்ற பட்சத்தில் நம்முடைய துறை அதிகாரியை அங்கே அனுப்பி, அவர்களோடு கலந்துபேசி, அதற்குரிய மாற்று வழியைத் தெரிவிக்கும்பட்சத்தில் அது கண்டிப்பாக நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அம்மா அவர்கள் வழியில் நல்லாட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய அமைச்சரவையில், உள்ளாட்சித் துறையில் மிகச் சிறப்பாக, மக்களுக்குத் தங்குதடை இல்லாமல் குடிநீர் வழங்கி, சாதனை படைத்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், எங்கள் பேரூராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை வழங்கியிருக்கின்றீர்கள். அந்தத் திட்டத்தை வழங்குகிறபோது, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பராமரிப்பதற்கான ஓர் உறுதியைக் கொடுத்திருந்தார்கள். அதை இப்போது ஓராண்டாகக் குறைத்துவிட்டார்கள். பேரூராட்சியில் வருமானம் அதிகமாக இல்லை. ஆகவே, அதை 5 ஆண்டுகளாக மீண்டும் நீட்டித்துக்கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பெருந்துறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் முன்னாள் அமைச்சராக இருந்தவர். அதிகமான திட்டங்களை அம்மா அவர்களிடமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் கேட்டுப் பெற்று, அந்தத்

2021 பிப்ரவரி 26]

தொகுதியில் அதிகமான பணிகள் செய்யப்பட்டுள்ளன. புதிய திட்டங்கள் எல்லாம் அதிகமான அளவில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. பாதாள சாக்கடைத் திட்டத்தில் 5 ஆண்டுகளுக்கு பராமரிப்புப் பணிகள் என்று இருந்ததை ஓராண்டாகக் குறைத்துள்ளதாகத் தெரிவித்திருந்தார்கள். அதை எதனால் குறைத்தார்கள் என்பது என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. கண்டிப்பாக துறை அதிகாரிகளிடம் கேட்கப்படும். தமிழகத்தில் 528 பேரூராட்சிகள் இருக்கின்றன. ஒரு சில பேரூராட்சிகளைத் தவிர மற்ற பேரூராட்சிகளில் எல்லாம் வருமானம் குறைவாகத்தான் இருக்கின்றது. எனவே, மீண்டும் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

34—

நீதிமன்றம்

***52137—திருமதி ம. கீதா:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் பகுதியில் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கிருஷ்ணராயபுரம் தொகுதியில் உள்ள கடவூர் வட்டத்தில் நீதிமன்றம் அமைப்பதற்கு இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.